25.03.2025 S.C.No.138 of 2017 P.W.15 – Palani

(A3 and A6 absent and their absence condoned u/s 317 of Cr.P.C. petitions filed and allowed. A1, A2, A4 and A5 present)

Crl.M.P.No. 836 to 838 of 2025, dated 07.03.2025 மனுக்கள் அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 1 முதல் 6 எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

குறுக்கு விசாரணை தொடங்கிய நேரம் மதியம் 02.55 P.M.

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

திருமணமான மூன்று ஆண்டுகள் கழித்து என் மனைவி வேலைக்கு சென்ற ஷு கம்பெனியின் பெயர் தெரியாது. என் மனைவி காணாமல் போவதற்கு மூன்று மாதத்திற்கு முன்பே என் வீட்டிற்கு ஷமீல் பாஷா வந்தது தொடர்பாக பிரச்சினை இருந்தது என்றால் சரியல்ல.

என் மனைவி காணாமல் போவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பே ஷமீல் பாஷா என் வீட்டிற்கு வந்தது தொடர்பாக என் அக்கா செல்வி என்கிற செந்தாமரையிடம் நான் சொன்னேன் என்றால் இல்லை. என் மனைவி காணாமல் போன தேதி 24.05.2015.

எஸ்எஸ்ஐ ரவியிடம் என் மனைவி காணாமல் போனதாக நான் கொடுத்த புகாரில் என்னுடைய பெயர், விலாசம், தேதி, யார்யாரின் மேல் சந்தேகம் என்று எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். சந்தேக நபர்களாக எஸ்எஸ்ஐ ரவியிடம் கூறிய சரவணன், புகழேந்தி ஆகிய நபர்கள் நான் போட்ட HCP மனுவில் அவர்கள் பெண்களை வைத்து தொழில் செய்பவர்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் அப்படி

எதுவும் நான் சொல்லவில்லை. எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியாது. எ.த.சா.ஆ.9 ல் உள்ள முதல் மற்றும் இரண்டாவது பக்கத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த HCP மனுவில் நான் போட்ட பிரமாண வாக்குமூலத்தில் சரவணன் மற்றும் புகழேந்தி ஆகியோர் பெண்களை வைத்து தொழில் செய்பவர்கள் என்று நான் சொல்லியுள்ளேன் என்றும் தற்போது வழக்குக்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் புகார் கொடுக்க நானும் என் ஊர்க்காரர் மண்டேல், என் மாமனார் ஆகியோர் சென்றோம் என்றால் சரிதான். இந்த வழக்கு தொடர்பாக என்னை யார்யார் விசாரித்தார்கள் என்றால் நீதித்துறை நடுவர் மற்றும் சிபிசிஐடி போலீசார் விசாரித்தனர். போலீஸ் விசாரணையிலும், சிபிசிஐடி விசாரணையிலும், இந்த நீதிமன்ற முதல் விசாரணையிலும் முன்னுக்குபின் முரணாக சாட்சியம் அளித்ததால் என்னுடைய சாட்சியத்தை ஏற்க முடியாது என்றால் சரியல்ல.

என்னுடைய முதல் விசாரணையில் இந்த வழக்கில் 1ம் எதிரி மார்டின் பிரேம்ராஜ்–ஐ பார்த்ததாக சொல்லியிருக்கிறேன் என்றும் இந்த வழக்கின் காலத்தில் அவர் வேறு பணியில் இருந்தார் என்றால் சரியல்ல. சிபிசிஐடி சொல்லிக்கொடுத்து நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றும் என்னை விசாரித்தது எஸ்எஸ்ஐ ரவிதான் என்றும் அதை மறைத்து நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

**5 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் என்னை விசாரித்தவர் எஸ்எஸ்ஐ ரவி என்றால் சரிதான். 19.06.2015 அன்று எஸ்எஸ்ஐ ரவி ஷமீல் பாஷாவை காவல் நிலையத்திலிருந்து கையெழுத்து வாங்கிக்கொண்டு அனுப்பிவிட்டதாக சொன்னார்.

எஸ்எஸ்ஐ ரவி, மார்டின் பிரேம்ராஜ் ஷமீல் பாஷாவை விசாரித்ததாகவும் அவர் சொன்னதையே சொன்னதால் அவரை அனுப்பிவிட்டதாகவும் சொன்னார். அன்றைய தினம் மார்டின் பிரேம்ராஜ் காவல் நிலையத்தில் இல்லை என்றால் சரியல்ல. 19.06.2015 அன்று காலை என் அக்கா மகள் மேகலா மற்றும் மச்சான் ஜீவரத்தினம் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு சென்றபோது மதியம் ஷமீல்–ஐ ரவி எஸ்ஐ அவர்கள் எழுதி வாங்கிக்கொண்டு அவரது சொந்தக்காரர்களுடன் அனுப்பிவிட்டதாகவும் அது பற்றி ரவி எஸ்ஐயிடம் கேட்டபோது ஆம்பூர் எம்எல்ஏ போன் செய்ததாகவும் அதனால் அனுப்பியதாகவும் இரண்டு நாட்களில் பவித்ராவை தேடி கண்டுபிடித்து தருவதாக சொல்லியுள்ளார்கள், அதனால்தான் அனுப்பியுள்ளோம் என்று சொன்னார் என்று என்னுடைய கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம்.

பவித்ராவை கண்டுபிடித்து தருகிறோம் என்று ஆய்வாளர் சொன்னதாக நான் சொல்லிய நிலையில் சிபிசிஜடி அவர்கள் சொல்லிக்கொடுத்ததின் அடிப்படையில் நீதிமன்றத்தில் சொல்லும்போது பிரேம்ராஜ் அவர்களை இந்த வழக்கில் இணைக்க வேண்டும் என்ற திட்டத்துடன் அவர்களின் வலியுறுத்தலின் அடிப்படையில் இவ்வாறு சொல்லியுள்ளேன் என்றும் நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

17.06.2015 அன்று மார்டின் பிரேம்ராஜ் என்பவர் சேடோ டியூடிக்காக ஆம்பூரில் இருந்த காரணத்தினாலும் மேலும் பாலாற்றங்கரையில் பொலீரோ வாகனத்தில் உள்ளவர்களை விசாரிப்பதற்காக காலையிலேயே சென்றுவிட்டதால் அவர் காலையில் காவல் நிலையத்தில் இருந்தார் என்று சொல்வது காவல் நிலையத்தில் ஷமீல் பாஷாவையோ, இன்னொரு நபரையோ விசாரித்தார் என்பது பொய் ஆகும் என்றால் சரியல்ல. சிபிசிஜடி போலீசார் சொல்லிக்கொடுத்ததின் அடிப்படையில் நான் பொய்யான சாட்சி அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை**

**விசாரணை முடிவுற்ற நேரம் மதியம் 03.20 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.03.25 17:38:08 +0530